# காலனிய ஊர்காவற்றுறையின் கட்டடக்கலை

பிரிந்தா குலசிங்கம்



# காலனிய
# ஊர்காவற்றுறையின்
# கட்டடக்கலை

பிரிந்தா குலசிங்கம்

ஜீவநதி பதிப்பகம்

காலனிய ஊர்காவற்றுறையின் கட்டடக்கலை • பிரிந்தா குலசிங்கம் • ©பிரிந்தா குலசிங்கம் • அட்டைப்பட ஓவியம்: ஹமன்கீல், கொர்னேலிஸ் ஸ்ரீகர் • அட்டை வடிவமைப்பு:யதார்த்தன் • நூல் வடிவமைப்பு: வி. தனலட்சுமி • முதல் பதிப்பு: 2021 • வெளியீடு: ஜீவநதி, 'கலையகம்', அல்வாய், இலங்கை • மின்னஞ்சல்: jeevanathi@yahoo.com • அச்சுக்கோப்பு : பரணி அச்சகம், நெல்லியடி • பக்கம்: 190 • விலை ரூ: 600

Colonial Architecture in Uurkavaturai (Kayts) • Pirintha Kulasingam • Pirintha Kulasingam© • Cover painting: Fort Hammenhiel by Corneils Steiger • Cover Design : Yatharththan • Book Design: V. Dhanalakshmi • First Edition: 2021 • Published by : Jeevanathi, 'kalaiaham', Alvai, Sri Lanka • jeevanathi@yahoo.com • Printed at: Baranee Printers, Nelliyadi • Pages: 190 • Price Rs. 600

ISBN: 978-624-5881-18-5

வரலாற்றின் ஓரங்களில் வாழ்ந்தடங்கிய
மக்களுக்கு

# உள்ளடக்கம்

அறிமுகம் 6

1. காலனிய நிர்வாக அமைப்புக்கட்டடங்கள் உற்பத்தி செய்யப்பட்ட முறைமை 19

2. கிறிஸ்தவ மதவருகை கட்டடவெளியை மாற்றியமைத்தல் 69

3. காலனியாட்சியால் ஏற்படுத்தப்பட்ட சமூகமாற்றங்கள் கட்டட வெளியினை மாற்றுதல் 143

முடிவுரை 180

உசாத்துணைப் பட்டியல் 181

பிரிந்தா குலசிங்கம்: யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத்துறையில் கலைவரலாற்றில் தற்காலிக உதவி விரிவுரையாளராகவும் வருகை விரிவுரையாளராகவும் 2019 இலிருந்து பணியாற்றிவரும் இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத்துறையில் கலை வரலாற்றுப் பாடத்தில் 2018 இல் இளங்கலைமாணிப் பட்டத்தைப் பெற்றவர்.

# அறிமுகம்

கடந்த காலங்களில் 'ஊர்காவற்றுறை நகரம்' என அறியப்பட்ட ஊர்காவற்றுறை, கைவிடப்பட்ட கோட்டை இடிபாடுகள் தரைமட்டமாக்கப்பட்ட சுங்கத்திணைக்களக் கட்டடத் தொகுதிகள், இடித்தழிக்கப்பட்டும் மாற்றம் செய்தும் வரப்படும் தேவாலயக் கட்டடங்கள், முறையாகப் பேணப்படாது விடப்படும் வைத்தியசாலைக் கட்டடத் தொகுதிகள் மாற்றம் செய்யப்பட்டு வரும் பாடசாலைக் கட்டடங்கள், கைவிடப்பட்டு பற்றை ஏறிப்போன வீட்டுக் கட்டடத் தொகுதிகள் போன்றவற்றை இன்றுவரை யாழ்ப்பாணத்தில் செறிவாகப் பார்க்கத்தக்க ஓர் இடமாக இருந்து வருகிறது. இந்நிலவரத்தில் தான் இவ்வாய்விற்கான தேவையை உணரமுடிந்தது. இலங்கையின் கலைவரலாற்றில் ஊர்காவற்றுறையின் இத்தகைய காலனியகாலக் கட்டடங்கள் முழுமையாக உள்வாங்கப்படாது குறித்த சில கட்டுமானங்கள் மட்டுப்படுத்தப்பட்ட வாசிப்புகளுடன் வெளிவந்திருக்கின்றன. குறித்த பிராந்தியத்தின் முழுமையான வரலாற்றுப்பின்னணிகளுடன் அவை வாசிக்கப்படும் போதே உண்மைக்கு மிக அண்மையில் கலைவரலாற்றை அணுகமுடியும் எனும் பார்வையுடனான கலைவரலாற்றாய்வாக இதனை முன்வைக்கிறேன்.

ஒரு துறைமுக நகருக்கான சிறப்பியல்புகளுடன் இலங்கையின் மிக முக்கிய துறைமுகமாக வரலாற்றில் பார்க்கப்படத்தக்க முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கும் ஊர்காவற்றுறை காலனிய காலப்பகுதியிலேயே ஒரு பிரதான நகரமாக்கப்பட்டது. கீழைத்தேச நாடுகளின் வளங்களைச் சுரண்டலும் வர்த்தக வாய்ப்பைப்

பெற்றுக்கொள்வதற்குமாக தமது மத, மொழி, கலை மற்றும் பல கூறுகளைத் தமக்கான அடையாளங்களாக முன்வைத்தனர். வட இலங்கையைக் கைப்பற்றலும் அவர்களது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருத்தல் என்பதும் இத்தகைய தேவைப்பாடுகளின் அடிப்படையிலேயே. யாழ்ப்பாண இராசதானியும் அதன் வளப் பெறுபேறுகளும் மத உறுதிப்பாடும் காலனியவாதிகளை உறுத்தவே செய்தது. அவ்வாறு யாழ்ப்பாணத்தினைக் காவல் செய்யும் துறைமுக நகரமாக இருந்ததே ஊர்காவற்றுறை. யாழ்ப்பாணம் எனும் ஊரையும், அதன் இராசதானியையும் காவல் செய்யும் தந்திரோபாயமான அமைவிடத்தில் இத் தீவு அமைந்திருக்கின்றமை யாழ் குடாநாட்டினதும் இலங்கையினதும் வரலாற்றில் பல திருப்பங்களைக் கொண்டுவரக்கூடிய சாத்தியத்தையும் காட்டுகிறது.

இலங்கையின் இரண்டாவது முக்கியத்துவம் வாய்ந்த இயற்கைத் துறைமுகமாகவும் (முதலாவது- திருகோணமலை) இரண்டாவது அதிக இலாபம் பெறும் சுங்கத்திணைக்களமாகவும் (முதலாவது - கொழும்பு) ஊர்காவற்றுறை நகரம் 1950இற்கு முன்னர் விளங்கியது, கடல் வாணிபத்தால் செழித்த ஒரு நகரமாக இருந்தது. காலனியவாதிகளின் பயன்பாட்டுத் தேவைக்காக அவர்களால் மேலைத்தேசப் பாணிகளில் ஒரு நகரத் திட்டத்துடன் ஆட்சி, நிர்வாக, மதசார் கட்டடங்களைக் கட்டுவிக்கப்பட்டன. இதன் பின்னணியில் ஊர்காவற்றுறையிலுள்ள காலனியகாலக் கட்டடங்களின் அரசியலை அழகியலுட்பட்ட பல்வேறு கூறுகளின் அடிப்படையில் கண்டறியப்பட்டுள்ளது.

இப்புத்தகம் முன்வைக்கும் ஆய்வுப் பிரதேசத்தையும் ஆய்வுப் பகுதியையும் தெளிவுபடுத்த வேண்டியுள்ளது: யாழ்ப்பாணத்தின் ஏழு தீவுக்கூட்டங்களில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நகரமாக ஊர்காவற்றுறை வேலணைத்தீவிற்குள் அடக்கப்பட்டுள்ளது. 1939இல் ஊர்காவற்றுறை சகல தீவுகளையும் உள்ளடக்கிய நிர்வாகப் பரப்பின் (Islands DRO) தலைமை இடமாக இருந்தது. 1948இல் நெடுந்தீவு DRO பிரிவு உருவாக்கப்பட்டது, பின்னர் 1974இல் தீவகப் பகுதிப்பிரிவு ‘தீவுகள் தெற்குப்பிரிவு’, ‘தீவுகள் வடக்குப்பிரிவு’ என இரண்டு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது.

தெற்குப்பிரிவின் தலைமையகம் வேலணையிலும் வடக்குப்பிரிவின் தலைமையகம் ஊர்காவற்றுறையிலும் அமைந்துள்ளது. 2002இல் ஊர்காவற்றுறையிற்குள் அடக்கப்பட்ட காரைநகர் தனி உதவி அரசாங்க அதிபர் பிரிவாக வந்தது.

ஆனால் காலனிய காலத்தின் நிர்வாக மையத்தலைமையகம் ஊர்காவற்றுறையிலேயே இருந்தது. இதன் பின்னணியில் இன்றைய ஊர்காவற்றுறை, கரம்பன், பருத்தியடைப்பு, மற்றும் ஊர்காவற்றுறைக்குரியதாக அதன் காலனிய நிர்வாகத்திற்குட்பட்ட ஊர்காவற்றுறைக்கும் காரைநகரிற்கும் இடைப்பட்ட கடல் நீரின் நடுவிலுள்ள மணற்திட்டின் மேலுள்ள ஹமன்கீல் கோட்டைப் பகுதி மற்றும் ஊர்காவற்றுறையில் ஒரு நகரத்திட்டமிடலுடன் இருக்கும் கோட்டை, கட்டடத் தொகுதிகள், சுங்கத்திணைக்களம், பண்டகசாலை, தேவாலயங்கள், பாடசாலை, வைத்தியசாலை, சேமக்காலை, கல்லறை, வீட்டுக் கட்டடங்கள் போன்றவற்றை ஆய்வுப் பகுதியாக எடுத்துக் கொள்கிறேன். சேமக்காலை, கல்லறைகள் பொதுவாக கட்டடங்களாகக் கருதப்படுவதில்லை, நினைவுச்சின்னக் கட்டட நிர்மாணங்களாகவே அவை பார்க்கப்படும். கட்டட நிர்மாணப்பண்புகள் கொண்டிருப்பதால் அவற்றையும் இதற்குள் சேர்த்துக்கொள்கிறேன். அத்துடன் ஊர்காவற்றுறை என்பதன் இன்றைய நிலப்பரப்பு அர்த்தத்தைத் தாண்டிய புரிதலுடன் ஆய்வினை மேற்கொள்ள வேண்டியுள்ளதுடன் காலனிய காலப்பகுதிக்குரிய கட்டடங்களைத்தான் ஆய்வு கவனம் கொள்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்புத்தகத்திற்குத் தேவையான பிரதான சில பதங்களிற்கான விளக்கங்களையும் கட்டடக்கலை சார் கோட்பாட்டுள்ளீடுகளையும் கலைவரலாற்றைப் புரிந்துகொள்வதற்காக இங்கே சுருக்கமாகக் குறிப்பிடுகிறேன்.

இலங்கை போன்ற கீழைத்தேச நாடுகளை காலனிய வாட்சிக்குட்படுத்தி அந்நிலப்பகுதிகளிலுள்ள வளங்களைத் தமது முழுமையான ஆதிக்கத்திற்குக்கீழ் அந்நிலப்பகுதியையும் அப்பகுதியில் வாழ்ந்துவந்த மக்களையும் கொண்டுவரலை காலனியம் எனக்கூறலாம். வெப்ஸ்ரர் அகராதி "புதிய பிராந்தியத்தில்

குடியிருப்பைச் செய்பவராக இருப்போர் கொண்டிருக்கும் நிலை, தகுதி என்பவற்றை காலனியம் (Colonialism)'' என்கிறது. க்ரியா அகராதியின்படி காலனியம் என்பது ''மற்றொரு நாட்டின் ஆட்சியையும் சந்தையையும் இயற்கை வளங்களையும் பொருளாதாரத்தையும் தன்நாட்டின் நலத்திற்காக தன்வசமாக்கிக்கொள்ளும் மேலாதிக்கம்'' எனக் குறிப்பிடுவதுடன் பொருளாதாரத்திலும் இராணுவத்திலும் வச திமிக்க ஒரு நாடு மற்றொரு நாட்டை தன்னாதிக்கத்திற்குட்படுத்தி நடத்துகிற ஆட்சியை காலனியவாட்சி அல்லது காலனியாதிக்கம் என்கிறது.

கட்டடக்கலை எனும் பதம் கட்டடங்களைக் கட்டுதல் என்பது மட்டுமன்றி கணனித்துறை, மென்பொருட்கட்டடக்கலை போன்ற பல்வேறு துறைகளிலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இப்புத்தகம் பௌதீகமான வெளியில் பௌதீகமாகக்கட்டும் கட்டடங்களையே பேசுபொருளாகக் கொண்டிருக்கிறது. ''Architecture'' (கட்டடக்கலை) எனும் ஆங்கில வார்த்தை பிரான்சிய மொழியிலிருந்து கடன் வாங்கிய ஒரு சொல் என்பதுடன் கிரேக்கத்தில் ''arkhitekton'' எனும் பதம் ''arkhi''(master) மற்றும் ''tekton'' (builder) போன்ற இரு சொற்களின் இணைப்பாக இருக்கிறது. குறித்த கிரேக்க வேர்ச்சொல்லிற்கு இணையான அர்த்தத்தையே இலத்தீனில் கூறும் ''architectus'' எனும் பதமும் கொண்டிருக்கிறது. இவற்றிலிருந்து வந்த பிரான்சியச் சொல்லான ''architecte'' எனும் சொல் ''ஒரு கட்டடத்தின் கட்டுமானத்தைத் திட்டமிட்டுச் செயலாற்றுபவர்'' எனும் பொருளைக்கொண்டுள்ளது.

''கட்டடத்தின் கலை அல்லது விஞ்ஞானம் என்பதுடன் கட்டுமானங்களைக் கட்டுவதும் வடிவமைப்பதுமான பயிற்சி கட்டடக்கலை எனப்படும், குறிப்பாக வசிக்கத்தக்க கட்டடங்களாக பிரக்ஞைபூர்வமாக வடிவம் மற்றும் கட்டமைப்பு போன்றவற்றை ஒன்றிணைப்பதாக இருக்கும்.'' என வெப்ஸ்ரர் அகராதி கூறுகிறது. கட்டடக்கலை என்பது கட்டடங்களைக் கட்டுவதுடன் மட்டுமே மட்டுப்படுத்தப்படாது கட்டுமானம், பொருட்கட்டுமானம், கூட்டுக் கட்டுமானங்களான மாநகர வடிவமைப்புகள், நிலத்தோற்றக் கட்டடக்கலை என்பவற்றையும் அடக்கும். நோக்கம் கருதிக்கூட

வடிவம், வெளி என்பவற்றை உருத்திரிபு செய்து மாற்றியமைத்தலும் நிகழும். அத்துடன் கட்டுமானம் மட்டுமன்றி சூழவுள்ள சூழல், அது அமைக்கப்பட்டிருக்கும் அமைவிடம் என்பனவும் கட்டடக்கலைக் கூறுகளாகப் பார்க்கப்பட வேண்டியவை. கட்டடக்கலை தொட்டுணர முடியாத கூறுகளையும் கொண்டிருக்கும் என்பதற்கு பிரான்சியக் கட்டடக்கலைஞர் லு கார்புசியர் கூறும் "ஒளியின் கீழ் உருக்கள், வடிவங்கள் சிறப்புற உன்னதமான, சரியான சிறப்புவாய்ந்த பிரம்மாண்டத்தைக் கொண்டிருக்கும்" என்ற கருத்தை எடுத்துக்காட்டாகக் கூறமுடியும்.

கட்டடக்கலை வடிவமைப்புக்கலை, விஞ்ஞானம் போன்றவற்றுடன் தொடர்புகொள்வது போல் வெவ்வேறு அணுகுமுறைகளில் அவற்றை வாசிக்கலாம்: 1. கலைஞர் தனது இயற்கையான ஆற்றலுடன் கட்டடக்கலைக்குரிய தகமைகளுடன் ஆக்கத்திறனை வெளிப்படுத்தல். 2. கணிதம், பௌதீகவியல், விஞ்ஞானங்கள், விஞ் ஞான முறையியல்களுடன் வெளியைக் கட்டமைத்தல். 3. சரியான திட்டமிடல், வடிவமைத்தல், மூலப்பொருட்களை இணைத்தல், அவற்றிற்கு மேலாக அலங்காரங்களைக் காட்சிசெய்தல். 4. கட்டடம் கட்டப்பட்டதற்கான பயன்பாட்டிலக்கினைப் பூர்த்திசெய்தலுடன் பொருத்தமான வெளி முகாமைத்துவத்தைக் கொண்டிருத்தல். 5. அழகியல் வெளிப்பாட்டினைக் கொண்டிருத்தல், பார்வையாளர் கட்டடத்தைப் பார்க்கும்போது மேலதிகமான ஈர்ப்பினை வழங்கி அழகியற்தோற்றப்பாடுகளை வெளிப்படுத்தல்.[1] இவ்வாறான அணுகுமுறைகளின் அடிப்படையிலும் கட்டடக்கலைகளை வாசிக்கலாம்.

கட்டடக்கலை பொதுவாக நிலம் போன்ற ஒரு வெளி யிலமைக்கப்படுவதால் அவ்வெளியினை உரிமை கோரும் அதிகாரத்தையும் அது வெளிப்படுத்தக்கூடியது. காலனியாட்சி புவியியற் பகுதிகளை தனது ஆட்சியின் கீழ் கொண்டுவரும் ஆதிக்கச் செயற்பாடாகியமையால் காலனியக்கட்டடங்கள் அவை அமைக்கப்பட்ட இயல்பிலேயே ஆதிக்கத்தைக் கொண்டிருக்கும் என்பது தெளிவான விடயம். மேலைத்தேசக் கட்டடக்கலைக் கோட்பாடுகளைக் கொண்டு தான் இவர்களது

கட்டடங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதற்கேற்ப இக்கட்டடக்கலைக் கோட்பாடுகள் பற்றிப்பார்ப்பது அவசியமாகிறது. கட்டடக்கலைக்கோட்பாடு குறிப்பாக அது வளர்ச்சியடைந்து வந்த காலப்பகுதிக்குரிய பேரரசர்களினதும் அரசர்களினதும் ஆசை, அபிலாசைகளினைப் பிரதிபலிப்பதாக இருக்கிறதே தவிர அது ஒன்றும் தனித்த ஒன்றாக உருவாகி வந்ததல்ல. அத்துடன் அக்காலத்திற்குரிய அரசியல், விஞ்ஞான, கலாசார, தத்துவ, சமூக பண்புகளையும் காட்டும்[2] என்ற புரிந்துணர்வுடன் இக்கோட்பாடுகளை அணுகவேண்டும். ஊர்காவற்றுறையின் காலனிய கட்டடங்கள் இப்பண்புகளைக் கொண்டிருக்கின்றனவா என்பதையும் இப்புத்தகம் பார்க்க இருக்கிறது.

மேலைத்தேசக் கட்டடக்கலைக்கான சிந்தனை மூலங்கள் பழைய வேதாகமம் மற்றும் செந்நெறிவாதங்களிலிருந்து பெறப்பட்டது: முன்னையது இஸ்ரேலிய மரபுகளைக் கொண்டது, அடுத்தது கிரேக்க- உரோம மரபினைக் கொண்டது. செந்நெறிமரபிலிருந்து வருபவரான றோமக்கட்டடக்கலைஞர் மாற்குஸ் வித்றூவியஸ் போலியோ (கி.மு 85-20) கட்டடக்கலையின் பண்புகள் பற்றிய "கட்டடக்கலை" எனும் புத்தகத்தில் மூன்று கருத்துருக்களை முன்வைக்கிறார்: 1. *Firmitus* - கட்டுமானமொன்றின் நீடித்ததன்மை, ஊடகங்கள், வடிவமைப்பு. 2. *Utilitas* - கட்டுமானத்தின் நோக்கமும் தொழிற்பாடும். கட்டடம் எதற்காகக் கட்டப்பட்டதோ அதற்கான சேவையை அக்கட்டடம் ஆற்றவேண்டும், வெளிப்படுத்த வேண்டும். 3. *Venustas* - கட்டுமானத்தின் அழகியல் பார்வையாளர் மனதில் தனித்துவமான ஒரு நிலைகொள்ளலைச் செய்யவேண்டும், ஏனைய கட்டுமானங்களிலிருந்து பிரித்தறியும் தனித்துவத்தைக் கொண்டிருக்கவேண்டும்.[3]

இவரது பத்து புத்தகங்களில் முதலாவது புத்தகத்தில் கட்டடக்கலையின் ஆறு கொள்கைகளை முன்வைக்கிறார்: வரிசை (order), ஏற்பாடு (arrangement), விகிதாசாரம் (eurythmy), செஞ்சீர்த்தன்மை அல்லது சமச்சீர்த்தன்மை (symmetry), உடமையாளர் (propriety), பொருளாதாரம் (economy). இவரது கட்டடக்கலையின் சுவை பிற்பட்ட கெலனிக்

பாணியினதாக இருந்துள்ளதுடன் உரோமக் கட்டடக்கலையை விட கிரேக்கக்கட்டடக்கலையே இவரது கோட்பாட்டில் வெளிப்பட்டிருக்கிறது. இவரது பிரதான அழகியல் பற்றிய கருத்துரு செஞ்சீர்த்தன்மையை முன்னிலைப்படுத்துகிறது: ஒன்றுக்கொன்று ஒவ்வொரு பகுதிகளும் சமச்சீரான இணக்கப்பாட்டினால் உருவாக்கும் முழுமை சமச்சீர்த்தன்மை எனப்படும். இவை தவிர பொருளாதாரம் பற்றிக் குறிப்பிடுகையில் புலத்தினதும் ஊடகங்களினதும் சரியான முகாமைத்துவம் இருக்கவேண்டும் என்பதாகக் கூறியள்ளார்.[4] வித்றூவியஸின் கட்டடக்கலை பற்றிய கோட்பாடுகள் பொதுவாக மேலைத்தேசக் கட்டடக்கலைக்கான மூலக்கோட்பாடாக இருந்துவருவதால் மேலைத்தேசத்தவர்களது ஆட்சியில் அவர்களால் முன்வைக்கப்பட்ட கட்டடக்கலை இம்மூலங்களைக் கொண்டிருக்கிறதா என்பதையும் உருவவியல் வாசிப்பினூடாக அறியலாம்.

அடுத்து ஐரோப்பிய மறுமலர்ச்சிக்காலத்தின் மனிதமையவாதக் கொள்கைக்கருத்தைக் கொண்ட கட்டடவியலாளரும் கட்டடக்கலைக் கோட்பாட்டாளருமான லியோன் பற்றீஸ்ரா அல்பேர்ரியின் அழகியற் கோட்பாடு மறுமலர்ச்சிக்காலம் மட்டுமன்றி பின்னர் வந்த மூன்று நூற்றாண்டுகளுக்கும் புத்திஜீவித்தனமான அடித்தளத்தையிட்டதாகக் கருதுவர். இவரைப் பொறுத்தவரை கட்டடக்கலை என்பது “lineaments” (தெரிவு, தயாரிப்பு என்பவற்றில் தங்கியுள்ளது) மற்றும் “Matter” (கட்டடம் கட்டுவதன் காரணத்திற்குரிய மனம், அதிகாரத்துடன் தொடர்புடையது) என்பவற்றை உள்ளடக்கிய “உடலின் வடிவமாகும்.” மேலும் தெளிவுபடுத்தினால் கட்டடத்தின் முழு அதிகாரமும் அதைக்கட்டுவதற்கான காரணமும் அதைக்கட்டுவதன் தெரிவு, கட்டமைப்பு என்பவற்றால் ஒழுங்கமைக்கப்படும். வித்றூவியஸின் கொள்கைகளை விரிவுசெய்வதாக இவரது கொள்கைகளைப் பார்க்கலாம். இவரும் கட்டட அழகியல் ஏதோவொரு வகையில் செஞ்சீர்த்தன்மையுள்ளதாக இருக்கவேண்டும் என்பதைத்தான் கூறுகிறார், ஆனால் வேறு பதங்களில் இன்னும் விரிவாகக் கூறுகிறார்: lineaments என்பதை முதன்மைப்படுத்தி பொருத்தமான இடம், சரியான இலக்கங்கள், சரியான அளவுகள், அழகான வரிசைகள் என்பன கட்டடத்தை உருவாக்கும், இவையெல்லாம்

lineaments இல் தங்கியுள்ளதாகக்கருதினார். இவை தவிர பிளேட்டோவின் எண்ணியவிகிதத்தினை இணக்கவிகிதமாக கட்டடக்கலைக்குள் சேர்த்தார். அல்பேர்ட்டியின் அழகியலும் இந்த முழுமையான எண்ணியத்திட்டங்களின் அடிப்படையிலேயே வெளிப்பட்டது. இதிலிருந்து கட்டடக்கலைக்கான அழகியல் கட்டடவிகிதத்தின் (proportion) அடிப்படையிலேயே இவரால் முன்வைக்கப்பட்டிருக்கிறது என்பதை விளங்கிக் கொள்ளமுடிகிறது.[5] மற்றொரு மறுமலர்ச்சிக்கால கட்டடக்கலைஞரான பலாடியோ (1570) வித்றூவியஸின் மூன்று கருத்துருக்களை முன்வைத்து வித்றூவியன் சமச்சீர்த்தன்மையை உள்வாங்கியதுடன் முழுமையான அழகு அல்லது பிரபஞ்ச விகிதங்கள் சகல சிறந்த, நல்ல வடிவமைப்புகளுக்கு அடித்தளம் என நம்பினார்.[6] இக்கோட்பாடுகள் அக்கால சிந்தனைமுறையிலிருந்து வருவிக்கப்பட்டவை என்பதால் அக்காலத்தின் பன்முக அரசியற்பார்வைகளால் தாக்கம் செலுத்தியிருக்கக்கூடியவை.

கட்டடக்கலைசார்ந்த இத்தகைய அழகியற் கோட்பாடுகளின் தாக்கத்தை இங்கு உருவாக்கப்பட்டிருக்கும் கட்டடங்களில் பொருத்திப் பார்க்கமுடியும். ஆனால் இத்தகைய அழகியற் கோட்பாடுகளை மேவி நவீன, பின்நவீனக் கோட்பாடுகளின் பின்னணியிலும் இக்கட்டடங்களிற்குப் பின்னாலிருக்கும் அரசியலைப் புரிந்துகொள்ளவேண்டும். மேலைத்தேசத்தவர்களால் அவர்களது காலத்தில் ஊர்காவற்றுறையில் அவர்களது தேவைகளின் பொருட்டு நிர்வாகக்கட்டடங்களும் தேவாலயங்களும் மற்றும் பல கட்டடங்களும் கட்டப்படுகையில் அக்கட்டடங்களின் அழகியல் அவர்களது அழகியற்கோட்பாடுகளுக்கேற்ப பார்க்கப்படவேண்டியவை.

காலனியவாதிகள் சர்வதேச வர்த்தகத்தைப் பிடித்துக்கொள்வதன் திட்டத்திற்கேற்ப ஒவ்வொரு கீழைத்தேச நாடுகளையும் தமது விளை நிலங்களாக ஆக்கிரமிக்கும் அதிகாரப்போட்டியில் ஒவ்வொன்றும் தமக்கிடையே போட்டியிட்டு தத்தம் அடையாளங்களை நிறுவும் பொருட்டு தமது அரசியல், கலாசாரக்கூறுகளை தாம் ஆக்கிரமித்த நாடுகளில் நாட்டின. இதன் தொடர்ச்சியாக அல்லது மனித வளர்ச்சியில் போட்டியிட்டு ஒன்றையொன்று கொன்று வளரும்

ஆதிக்க மனோபான்மையில் உருவாகும் ஆதிக்க இயல்புகளின் படி இன, சாதிய, வர்க்க, பால்நிலை மற்றும் பல பிரிவுகளினால் சுதேசிகளும் தமக்கான அதிகாரக் கட்டமைப்புகளின்வழி தமது அடையாளங்களை நிறுவுவதற்கான போட்டியாக அல்லது அதிகாரத்திற்கான எதிர்ப்பு வடிவங்களாக ஊர்காவற்றுறையின் காலனியகால கட்டடங்களை இனங்காண்கிறேன்.

இப்புத்தகத்திற்கான ஆய்வுப்பரப்பானது விரிந்து கனதியாக யிருக்கக்கூடியது. பூரணப்படுத்த முடியாதபடி ஒவ்வொரு கட்டடவெளிகளும் முடிவடையாத எல்லையைத் திறந்துவிடுவதால் இவ்வாய்வினை முற்றுப்பெற்றதாக முன்வைக்காமல் தொடர்ச்சியான கலந்துரையாடல்களை நிகழ்த்துவதற்கான ஓர் ஆரம்பப்புள்ளியாகவே முன்வைக்கிறேன். கத்தோலிக்கமத சார்பிலான ஆய்வுகள் அல்லது ஊர்காவற்றுறையை ஏதோவொரு பகுதியளவில் உள்ளெடுத்த ஆய்வுகள் என்பன நிகழ்ந்திருக்கிறது. அவை ஊர்காவற்றுறையை வரலாற்று நோக்கில் விளங்கிக்கொள்ள போதுமானதாக இல்லை.

ஊர்காவற்றுறை காலனியகாலத்திலிருந்து வம்சாவழியாக வரும் மக்களை இழந்த நிலையில் அம்மக்களின் காலனியகால அனுபவங்களை அறிந்துகொள்வது இயலாத காரியம். இந்நிலையில் ஊர்காவற்றுறையிலிருந்து வெளியேறி வெளிநாட்டில் வாழும் குறிப்பிட்ட ஒரு பகுதியினர் ஊர்காவற்றுறையின் வரலாற்றைப் பதிவுசெய்யும் முயற்சியை மேற்கொண்டிருக்கின்றனர். ஆங்கில மொழியில் எழுதப்பட்ட அவர்களது புத்தகமான "ஊர்காவற்றுறையின் ஒரு வரலாற்றுப்பதிவு" நான் ஆய்வுசெய்துகொண்டிருந்த காலத்தில் வெளிவந்தது, குறித்த மக்களது குறிப்பிட்ட கதைகளை அதிலிருந்து எடுக்கமுடிந்தது. அப்புத்தகம் ஊர்காவற்றுறையை சுவடியாக்கும் நோக்கில் முன்வைக்கிறது. ஆனால் துணைநூல்ப் பட்டியல்களின்றியிருப்பதால் அதை ஆய்வாகவோ அல்லது சுவடியாக்கமாகவோ கருதுவதில் சிக்கலிருக்கிறது. அதுமட்டுமன்றி மதசார் தன்மைகளையும் அது கொண்டிருக்கும் பட்சத்தில் வரலாற்று நோக்கிலோ கருத்தியல் ரீதியாகவோ அவை குறைபாடுகளைக் கொண்டவை. ஆனால் பெருமளவான பரப்புகளை அது

அறிமுகப்படுத்தியிருந்தது எனது ஆய்விற்குப் பெரும் உதவியாகவும் இருந்தது.

என்னுடைய ஆய்வினைக்கூட முழுமையான ஒன்றாக முன்வைக்கவில்லை. குறுகிய காலத்திற்குள் ஆய்வையும் நூலுருவாக்கத்தையும் வேகப்படுத்த வேண்டியிருந்தமையால் இப்புத்தகத்திலும் நிரப்பவேண்டிய போதாமைகளை உணர்கிறேன். பல தலைமுறைகள் கடந்த நிலையில் ஊர்காவற்றுறையின் கலை, கட்டடக்கலைகள் மாற்றத்திற்கோ அழிவிற்கோ உள்ளாகிவரும் நிலையில் இவை பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்படாதிருக்கிறது. இந்த ஆய்வுத்தேவையைக் கருத்திற்கொண்டு இந்நூலை வெளியிட விரும்புகிறேன்.

---

1. Janetius, S.T," What is architecture" chapter 2, pp7&12
2. Mallgrave, H.F, Architectutural Theory, UK:Blackwell publishing, 2006, 23
3. Ibid 23
4. Ibid 23,32
5. Ibid 57, 60
6. Ibid 72